பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 02 | திங்கட்கிழமை | 15.04.2024 | அதிர்வு 258

வலி. மேற்கு பிரதேச சபையின்

## முன்னாள் தவிசாளர் நேற்று காலமானார்!



வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் (கஜன்) நேற்றுக் 06

# இவ்வருடம் தேர்தல்கள் மூலமாக பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும்!

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



இந்த ஆண்டு தேர்தல்கள் மூலமாக உண்மையான பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06

# கோர விபத்தில் இருவர் பலி!

## ஐவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



(ஆ.ரமேஸ்)

புஸ்ஸலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்பொட பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று புஸ்ஸலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து நுவரெலியாவுக்குச் சுற்றுலாவுக்கு வருகை தந்து மீண்டும் கொழும்புக்குத் திரும்பிச் சென்ற வான் ஒன்றே வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது வானில் 06

## ஜனாதிபதித் தேர்தலை

# பகிஷ்கரிப்பதன் மூலம் யாரை வெல்ல வைக்கப் போகின்றீர்?

## முன்னணியிடம் புளொட் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)



ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் யாரை வெல்ல வைக்கப் போகின்றார்கள் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இன்னமும் பகிரங்கமாகக் கூறவில்லை என்று புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் 06



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் வரும் சனிக்கிழமை காலை வவுனியாவில் நடக்கின்றது.

கட்சியைப் பொறுத்தவரை மிக முக்கிய கூட்டம் இது. கட்சியின் வழக்கு மற்றும் பொது வேட்பாளர் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் காத்திரமான முடிவுகள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சியின் தலைவராக நீடிக்கும் மாவை சேனாதிராஜாவை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் எம்.பி. சந்தித்துப் பேசி இருக்கின்றார் என்று தெரிகின்றது.

இரண்டு பேரும் மட்டும் பங்கு பற்றிய சந்திப்பு என்பதால் விடயம் விளக்கமாக வெளியே தெரிய வரவில்லை. 06





# சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் ரதோற்சவம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகர பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா உற்சவம் நேற்றய் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பஞ்சமுக விநாயக பெருமான் ரதத்தில் ஆரோ கணித்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

இவ் தேர்த்திருவிழாவில் பெருமளவிலான விநாயக அடியவர்கள் கலந்து கொண்டு விநாயக பெருமானின் அருள் கடாட்சத்தினை பெற்றுக்கொண்டனர்.

அடியவர்கள் அங்கபிரதட்டை, கற்பூரசட்டி எடுத்து நேர்த் திக் கடன்களை நிறைவேற்றினர்.

கடந்த முதலாம் திகதி கொடியேறத்துடன் ஆரம்பமான வருடார்ந்த மகோற்சவ பெருவிழா இன்று மாலை கொடியிறக் கத்துடன் நிறைவடையவுள்ளது.













# மேல், தென் மாகாணங்களில் சோதனைகளில் இருவர் கைது



மேல் மற்றும் தென் மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொலிஸ் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரண்டு பேரும் முல்லேரியா மற்றும் அங்கொட பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டனர் எனக் கூறப்படும் 4 பேரும் கைதாகியுள்ளனர்.

மேல் மற்றும் தென் மாகாணத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப் பகுதியில் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த 412 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாகவுள்ளனர் எனத் தகவல்

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகனை தாக்குதல்களை நடத்தியுள்ள நிலையில் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், டுபாயிலிருந்து இலங்கையர்கள் குழுவுடன் டெல் அவிவ் நோக்கி பயணித்த விமானம் தொடர்பில் அவர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

மேற்படி விமானத்தை மீண்டும் டுபாய் நோக்கித் திரும்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அந்த விமானத்தில் இஸ்ரேல் நோக்கி பயணித்த இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை திரட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பத்து சதவீதத்தினால் அதிகரித்துள்ளது



அதிவேக நெடுஞ்சாலைகளின் போக்குவரத்து 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அதிவேக நெடுஞ்சாலையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நேற்று முன்தினம் மாத்திரம் அதிவேக நெடுஞ்சாலைகளில் 128,000 வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன என அந்தப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.ஐ.டீ. கஹடபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதனூடாக 4 கோடியே 44 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் கிடைத்த வருமானம் 15 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதிவேக நெடுஞ்சாலைகளில் செலுத்துவதற்கு தகுந்த வாகனங்களை மாத்திரம் செலுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளியேறும் வாயில்களுக்கு அருகில் நிலவும் அதிக வாகன நெரிசலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.



# நுவரெலியா, மீபிலிபான இளைஞர் அமைப்பின் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்றார்

நுவரெலியா – மீபிலிபான “அபி யூத்” இளைஞர் அமைப்பினால் நுவரெலியா மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் இணைந்து நேற்று ஏற்பாடு செய்திருந்த சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றார்.

பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கு அமைவாக, இடம்பெற்ற இந்த நிகழ்வில், விளையாட்டு மற்றும் கலாச்சார அம்சங்கள் பலவும் உள்ளடக்கியிருந்தன.

புத்தாண்டு நிகழ்வு நடைபெற்ற இடத்திற்கு வருகைத் தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில போட்டிகளைக் கண்டுகளித்த பின்னர், அங்கு இடம்பெற்ற சைக்கிளோட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களும் பரிசுகளை வழங்கினார்.

சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை கண்டுகளிக்க வந்த பிரதேச மக்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். அப்போது மக்கள் முன்வைத்த பிரச்சினைகளுக்கு தீர்வைத் தருவேன் என அவர் உறுதி அளித்தார்.

அதற்கு இணையாக நாடளாவிய ரீதியில் உள்ள பல பிரதேச செயலக பிரிவுகளிலும் இம்முறை தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்படிருந்தது.

கடந்த வருடத்தை விடவும் இம்முறை அதிகளவில் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் ஏற்படு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

நுவரெலியா – மீபிலிபான சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும், பிரதேச அரசியல்வாதிகள் சிலரும் கலந்து கொண்டனர்.













# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் புதுவருடத்திலும் வவுனியாவில் கவனவீர்ப்பு




சித்திரை புதுவருடத்தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டுவரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பா. இந்த ஆர்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது அவர்கள் தரப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறுவதற்காக 2611 ஆவது நாளாக நாம் போராடிவருகின்றோம்.

அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களின் குழு ஒன்று அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது எமக்குப்மகிழ்ச்சியான விடயம். இவர்கள் சேர்ந்து, தமிழர்கள் மீதான அமெரிக்கக் கொள்கையில் ஒரு மாற்றத்தை வலியுறுத்தி, செயலாளர் பிளிங்கனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர்.

இலங்கையில் நடந்ததும் நடப்பதும் இனப்படுகொலை என்பதை அவர்கள் அந்தக்கடிதத்தில் குறிப்பிட்டடிருந்தனர். அத்துடன் தமிழர்கள் தம் அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் உரிமை உள்ளது. அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு தகுதியானவர்கள். இதன் மூலம் தமிழர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர்.

அமெரிக்காவில் உள்ள நமது தமிழர்களின் ஆதரவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். 10 அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே தமிழ் அரசியல்வாதிகள் மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்றவாறு தம்மை மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் அரசியலில் இருந்து பின்வாங்கி, புதிதாக நிறுவப்பட்ட இறையாண்மை நாடுகளான மொண்டினீக்ரோ, தெற்கு சூடான், கொசோவோ, கிழக்கு திமோர் போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, தமிழ் இறையாண்மையை மீட்டெடுக்க புதிய தலைமுறையை அனுமதிக்க வேண்டும். - என்றனர்.

# வேட்டைத் துப்பாக்கி வெடித்து ஒருவர் பலி



மதுராகொட அந்தபொல பிரதேசத்தில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைத்திருந்த துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றே இவ்வாறு வெடித்துள்ளதாகவும், சம்பவத்தில் பலத்த காயமடைந்தவர் நிதிகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

51 வயதான தொடம்கஸ்லந்த பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சில காலமாக துப்பாக்கிகளை பயன்படுத்தி விலங்குகளை வேட்டையாடி வந்தவர் எனவும், அவரால் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியொன்றே இவ்வாறு வெடித்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்



பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்படவுள்ளன என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்தமை உள்ளிட்ட தவறுகள் தொடர்பில் இவ்வாறு வழக்குக தொடரப்படவுள்ளன என அதிகாரசபையின் விசேட விசாரணைப் பணிப்பாளர் சஞ்ஜய இரசிங்க தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 7,627 வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனினும் வழக்கு விடயம் மற்றும் பொது வேட்பாளர் விவகாரம் குறித்து இருவரும் பேசி இருப்பர் என்று எதிர்பார்க்கலாம்.

வழக்கு விடயத்தில் பந்தை இதுவரை தான் வைத்து விளையாடிய சுமந்திரன், சனியன்று மத்திய குழுக் கூட்டத்தில் ஏனையோர் விளையாட அனுமதித்துப் பார்த்திருப்பார் என்று உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'வழக்குத் தொடர்பாக கடந்த 17ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் அரசியல் குழுவில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டு எனக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டதோ அதைத்தான் நான் கடந்த தவணை வழக்கின் போது முன்னெடுத்தேன். அரசியல் குழுவின் வழிகாட்டல் அதுதான் என்று விவரமாகத் தெரிவித்து எனது சமர்ப்பணங்களை மன்றில் முன் வைத்தேன். ஏனைய எதிராளிகளின் சட்டத்தரணிகள் எவரும் அந்த விடயங்களை எதிர்க்கவில்லை. அல்லது கட்சியின் அரசியல் குழுவின் முடிவு அதுவல்ல என்று நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கவில்லை. அரசியல் குழுவின் முடிவை - தீர்மானத்தை - நான் நீதிமன்றத்தில் சமர்ப்பணமாக முன்வைக்க, நீதிமன்றத்தில் வாய்மூடி மௌனிகளாக பார்த்திருந்தவர்கள், பின்னர் வெளியே வந்து அவற்றுக்கு மாறாக புது கதை விடுகின்றார்கள். ஆகையால் இதுதான் நிலைமை. என்ன செய்ய வேண்டும், எது சரி என்பதை மத்திய குழுவே முடிவு எடுத்துச் சொல்லட்டும். அதை வழக்கின் எதிராளியாக நான் நீதிமன்றத்தில் தொடர்வேன்' - என்று பந்தை மத்திய குழுவிடம் அடித்து விட்டு சுமந்திரன் பார்த்திருப்பார் என்றே தெரிகிறது.

மத்திய குழு எடுக்கும் முடிவை - நிலைப்பாட்டை - அதுதான் மத்திய குழுவின் முடிவு என்று அவர் நீதிமன்றத்தில் தெரிவித்து அதையே அவர் கைக்கொள்வார், அத்தகைய சூழ்நிலையில் விளைவுகளுக்கு மத்திய குழுவும், மத்திய குழுவை வரும் சனிக்கிழமை முன்னின்று அவ்வழியில் வழிநடத்துவோருமே இனி விளைவுகளைப் பொறுப்பேற்கவும் பொறுப்புக் கூறவும் வேண்டி நேரும் என்பதுதான் சுமந்திரன் விரிக்கக்கூடிய வலையாக இருக்கும் என்பது என் கணிப்பு.

பொது வேட்பாளர் விடயத்திற்கு தமிழரசுக் கட்சி இணங்குவது என்பது இப்போதைக்கு சாத்தியப்படும் சூழ்நிலை இருப்பதாகத் தெரியவில்லை.

"தமிழரசு கட்சியின் உட்கட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர் சிறீதரன் எம்.பி., ஆகையால் அவரைத் தமிழர் தரப்பின் பொது வேட்பாளராக நிறுத்தும் யோசனையை மத்திய குழுவில் பிரேரிக்கவா?" - என்று மத்திய குழு உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

பொதுவேட்பாளரை சாதகமாகப் பரிசீலிக்கும் சிறீதரனை அத்தகைய பொது வேட்பாளராக நிறுத்துவதும் நல்ல யோசனைதான். தமிழரசுக்குள் தாங்கள் மட்டுமே தேசியம் குறித்து அதிக சிரத்தை காட்டுபவர்களாக வெளிப்படுத்தும் நண்பர்களுக்கு இந்த யோசனை சமர்ப்பணம்!

## இவ் வருடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"அனைவருக்கும் இதயம் கனிந்த இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள். எங்கள் அனைவரினதும் விடிவுக்காகவும் இந்த ஆண்டு முழுமை பெறும் என்று நாங்கள் நம்பி இந்த ஆண்டை வரவேற்கின்றோம்.

இந்த ஆண்டு தேர்தல்கள் ஆண்டு என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் இந்த ஆண்டிலே இந்தத் தேர்தல்கள் மூலமாக மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திப்போம். அது உண்மையான பாரிய மாற்றமாக இருக்க வேண்டும்.

ஆட்சி முறையிலும் நாட்டினுடைய சரித்திரத்திலும் உண்மையான மாற்றம் ஏற்பட வேண்டும். அரசியல் உரிமைகள் அனைவரினதும் கைகளுக்கும் கிடைக்க வேண்டும். ஒவ்வொரு மக்களும் தங்களுடைய வாழ்க்கையைத் தாங்களே தீர்மானிக்கின்ற அந்த ஆட்சி முறைமை மாற்றம் ஏற்பட வேண்டும். அதுதான் உண்மையான மக்கள் ஆட்சி. அப்படியான ஒரு மாற்றத்தை நாங்கள் கொண்டுவர வேண்டும்.

தேர்தல்கள் வருகின்றபோது பலவிதமான குழப்பங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுவதுண்டு. பல பல வித்தியாசமான சிந்தனைகள் எல்லாம் உட்புகுத்தப்படுவதுண்டு. ஆனால், ஊழலற்ற உண்மையாக மக்களை ஆட்சி செய்கின்ற மாற்றம் ஏற்பட வேண்டும். எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் தங்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கத்தக்க வண்ணமாக ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் ஒரு மாற்றத்துக்கான தேர்தல். இதனை இலாவகமாக நாம் கையாள வேண்டும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஜி.ஜி. பொன்னம்பலம் முதல் எம்.கே. சிவாஜிலிங்கம் வரை என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்குவது சிங்களத் தரப்பில் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடாகும்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் மத்திய அரசுகள் பேச வேண்டும். மாநில அரசுகளுடன் பேசிப் பிரியோசனம் கிடையாது.

கச்சதீவு விவகாரம் இந்தியத் தேர்தல் களத்தில் பேசுபொருள். அதைப் பற்றி நாங்கள் பேச வேண்டியதில்லை. அதை இந்தியத் தரப்பினர் தேர்தலுக்காகப் பேசுகின்றார்கள்." - என்றார்.

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயணித்த ஏழு பேரில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் புஸ்ஸலாவ பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரத்தில் குறித்த வானில் பயணித்த மேலும் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும், மூவருக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இவர்கள் புஸ்ஸலாவ வவுக்பிட்டிய பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயங்களுக்குள்ளானவர்கள் கொழும்பில் இருந்து நுவரெலியாவுக்கு ஏப்பிரல் வசந்தகால நிகழ்வுகளைப் பார்வையிட வந்த இஸ்லாமியக் குடும்பத்தினர் எனத் தெரியவந்துள்ளது.

## முன்னாள் தவிசாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலமானார்.

அவர் உடல்நலமின்மை காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தர்மலிங்கம் நடனேந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்து வடமராட்சி... வப்படுத்தித் தேர்தலில் போட்டியிட்டு, இரண்டு தடவைகள் தவிசாளர் பதவியை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பகிஷ்கரிப்பதன் மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று பேசப்பட்டு வருகின்றது.

இவ்வாறாகப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்களும் சேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இதில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் நாங்கள் ஐந்து கட்சிகளும் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு செயற்படுகின்றோம்.

அதேநேரத்தில் இத்தகைய நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டு தமிழரசுக் கட்சியும் எம்மோடு இணைந்துகொள்ள வேண்டும்.

ஏனென்றால் இன்று அவர்கள் மத்தியில் கட்சிக்குள் பல பிரச்சினைகள் இருந்தாலும் அல்லது அவர்கள் பிளவுபட்டது போல் தெரிந்தாலும் அவர்கள் மிக முக்கியமாக ஒரு தமிழ்த் தேசியக் கட்சியாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள்.

ஆகையினால் அவர்களும் இந்த நிலைப்பாட்டில் சேர வேண்டும் என்பதையே என்னைப் பொறுத்தமட்டில் ஆரம்ப காலம் முதலே நான் சொல்லி வருகின்றேன்.

அதேபோல் விக்னேஸ்வரன் ஐயாவின் கட்சியும் இதிலே சேர்வது நல்லது. இதைப் போலவே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியும் இணைந்துகொண்டால் நல்லது.

ஆனால், அவர்கள் நிச்சயமாக இணைவதற்குத் தயாராக இல்லை. அவர்கள் இதையொரு நாடகம் என்ற ரீதியிலே கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அது ஏனென்றால் யாரையோ வெல்லப் பண்ணுவதற்கு நாங்கள் எடுக்கின்ற முயற்சி எனக் கூறுகின்றார்கள்.

ஆனால், அவர்கள் கூறுகின்ற பகிஷ்கரிப்பு என்பதும் யாரையோ வெல்லப் பண்ணுகின்ற முயற்சியாகவே நான் பார்க்கின்றேன். ஏனென்றால் அவர்கள் கூறுவது போல் பகிஷ்கரிப்பதன் மூலம் யாரோ ஒருவருக்கு இதில் வெற்றி வாய்ப்பைக் கொடுக்க முயற்சிக்கின்றார்கள் என்றுதான் நினைக்கின்றேன்.

கடந்த காலங்களில் கூட பகிஷ்கரிப்பின் மூலம் ஒருவரைத் தோற்கடித்து மற்றொருவரை வெல்ல வைக்கத்தான் 2005 ஆம் ஆண்டிலே அந்த முயற்சி இருந்திருக்கின்றது.

நிச்சயமாக ரணிலைத் தோற்கடித்து மஹிந்தவைக் கொண்டு வருவதற்காகத் தான் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதனூடாக சர்வதேச ரீதியாக செல்வாக்கற்றவர் மஹிந்த என்ற காரணத்தால் அவரை வெல்லச் செய்ய வேண்டும் எனக் கொள்கை ரீதியாகப் பகிஷ்கரிப்பு என்பதைச் செய்திருக்கின்றார்கள்.

07▶

# திருகோணமலை சேருநுவரவில் கத்திக் குத்தில் ஒருவர் மரணம்!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்காகி நபரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 8.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்தக்க த்திக்குத்து தாக்குதலினால் உயிரிழந்தவர் சேறுநுவர கல்வல சந்தியில் வசித்து வந்த எம்.ஜீ. சஞ்சீவ கருணாரத்ன (41வயது) எனவும் தெரிய வருகின்றது.

அனுராதபுரம் கணேவ பகுதியில் வசித்து வந்த சம்பிகா குமாரி என்பவர் திருமணம் செய்திருந்த வேளையில் கணவரை விட்டு பிரிந்து சேருநுவர பகுதியில் மற்றுமொரு நபருடன் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் முதலாவது கணவர் மனைவியை தேடி வந்து மனைவியுடன் வாழ்ந்து வந்த குறித்த நபரைக் கத்தியால் குத்தினார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த குறித்த நபரின் சடலம் சம்பவ இடத்தில் காணப்பட்டது. சடலத்தை பார்வையிட சம்பவ இடத்திற்கு மூதூர் நீதிவான் வருகை தர உள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



விசாரணைகளை சேர நுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் இளம் ஆசிரியை திடீர் சாவு!

## மரணத்தில் சந்தேகம்

யாழ்ப்பாணம் – ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய இளம் ஆசிரியை ஒருவர் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

அராலி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், மேற்படி ஆசிரியைக்குக் கடந்த சில நாட்களாக உடல் சுகயீனம் ஏற்பட்டது. இந்நிலையில், அவருக்குப் பில்லிசூனியம் ஏற்பட்டது எனத் தெரிவித்து அவருடைய தந்தையும் குறித்த ஆசிரியையும் இளவாலை முள்ளானை பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் தங்கி குணமாக்கல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆசிரியைக்குக் கடந்த வெள்ளிக்கிழமை வயிற்றுவலியும் வாந்தியும் ஏற்பட்டது. அவர் போதகர் மூலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.



அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சடலத்தைப் புதைக்குமாறு கூறி, சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## பகிஷ்கரிப்பதன் மூலம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதேபோல்தான் பகிஷ்கரிப்பதன் மூலம் யாரை வெல்ல வைக்கப் போகின்றார்கள் என்பதைப் பகிரங்கமாக அவர்கள் இன்னமும் கூறவில்லை.

மேலும், தமிழ்ப் பொது வேட்பாளராக வேலன் சுவாமியைப் போடலாம் என்று விக்னேஸ்வரன் எம்.பி. கூறியிருக்கின்றார். வேலன்சுவாமியைத் தெரிவு செய்வது மிக கஷ்டமான விடயம். ஏனென்றால் அவர் ஒரு மத ரீதியாக இயங்குகின்றவர். ஆகையினால் அந்தத் தெரிவை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

உண்மயில் வேலன் சுவாமியில் நல்ல மதிப்பு எனக்கு இருக்கின்றது. ஆனாலும், அது வேறு விடயம். அதாவது அரசியல் வேறு, மதம் வேறு என்பதால் அவரது தெரிவு பொருத்தமற்றது.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உயிர்கொல்லி நோய்

எச்.ஐ.வி. என்னும் எய்ட்ஸ் நோய் தொடர்பாக அதிர்ச்சி தரும் புள்ளிவிவரங்கள் வெளிவந்திருக்கின்றன.

2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 695 எய்ட்ஸ் நோயாளர்கள் புதிதாக கண்டறியப்பட்டுள்ளனர் என எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் சமூக சுகாதார நிபுணர் ஜானகி விதானாராய்ச்சி தெரிவித்திருக்கின்றார். இது கடந்த ஆண்டை விட 14 சதவீதம் அதிகரித்துக் காணப்படுவது ஆபத்தான விடயமாகும். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு என்றும் எச்சரிக்கப்படுகின்றது.

இலங்கையில் முதலாவது எய்ட்ஸ் நோயாளி 1987 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டார். தொழில் நிமித்தம் நைஜீரியா சென்று நாடு திரும்பிய களுத்துறை மாவட்ட வாசி ஒருவரே முதல் எய்ட்ஸ் தொற்றாளராக இங்கு இனம்காணப்பட்டார். அதன் பின்னர் 31.10.1997 வரை 76 பேர் எய்ட்ஸ் நோய்க்கு இலக்காகி 61 பேர் இறந்தனர். இவர்களில் ஆண்கள் 46 பேர். பெண்கள் 15 பேர் ஆவர். 2012ஆம் ஆண்டில் இலங்கையில் எய்ட்ஸ் தொற்றினால் 1,597 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இப்போது எச்.ஐ.வி. தொற்று மற்றும் எய்ட்ஸுடன் 4,500 இற்கும் அதிகமானோர் வாழ்ந்து வருகின்றனர் என்று கருதப்படுகின்றது. ஆனால் 2,900 பேர் மாத்திரமே சிகிச்சை பெறுகின்றனர். எஞ்சியோர் உரிய தடுப்பு மருந்துகளையோ, சிகிச்சைகளையோ பெறாமல் - பல சமயங்களில் தங்களுக்கு அத்தொற்று இருப்பதே தெரியாமல் - பலருக்கும் தொற்றை வழங்கிக் கொண்டும் இருக்கின்றார்கள்.

பாலியல் தொழிலாளர்களுக்கு ஊடாகவும், ஓரினச் சேர்க்கையாளர்களாலும் நாட்டில் அதிகளவானவர்கள் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகிறார்கள் என்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, அத்தகைய பாலியல் தொழிலாளர்களும் ஓரினச் சேர்க்கையாளர்களும் மிகுந்த அவதானத்துடனும் கரிசனையுடனும் நோக்கிக் கையாளப்பட வேண்டும்.

எச்.ஐ.வி. தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ளவோ அல்லது, முழுமையாக மீள்வதற்கோ இன்னமும் தடுப்பு மருந்து பூரணமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற போதும், உயிரியல் விஞ்ஞானிகள் அதற்கான தீர்வை நோக்கி வேகமாக பயணித்து வருகிறார்கள் என்பது சாதகமான தகவல்.

இந்நோய்த் தொற்று அபாயம் மற்றும் நோய்த்தடுப்பு யுக்திகள் நன்கறியப்பட்டுள்ள போதிலும் - கணிசமான அளவு இளைஞர்கள் எச்.ஐ.வி, எய்ட்ஸ் பற்றிய அறிவைப் பெற்றிருந்த போதிலும் - தாங்கள் எச்.ஐ.வி தொற்றுதலுக்காளாகும் அபாயத்தைக் குறைவாக மதிப்பிட்டு, பேராபத்து விளைவிக்கும் நடவடிக்கைளில் இறங்குகின்றனர் என எச்.ஐ.வி. எய்ட்ஸ் ஒழிப்பு அமைப்பு கூறுகின்றது. இந்தப் பொறுப்பற்ற போக்குத்தான் இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் பின்னடைவான காரணியாக இருக்கின்றது.

தெரிந்திருந்தும், புரிந்திருந்தும் கூட, தேடிச் சென்று விளக்கில் வீழும் விட்டில் பூச்சி போல பதின்ம வயதினரும், வளர்ந்தோரும் இவ்வினையை வாங்கிக் கொள்வதுதான் நமது சமூகத்தின் பெரும் துரதிர்ஷ்டம்.

பாலியல் தொழிலையும் ஓரினச் சேர்க்கை நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வேண்டிய நாட்டில், கசினோக்களை அறிமுகப்படுத்தி, விபச்சார கேளிக்கைகளை அதிகரிக்கும் போக்குதான் தொடர்கின்றது.

கடந்த காலங்களை விட தற்போது பதின்ம வயதினர் அதிக எண்ணிக்கையில் பாலியல் தொழிலிலும் உறவுகளிலும் ஈடுபடுகின்றனர் எனத் தெரியவருகிறது.

ஸ்மார்ட் போன்களால் செழித்து வளரும் பீடை இது. இதனால் எதிர்காலத்தில் இளவயதினர் மத்தியில் அதிகளவு எய்ட்ஸ் நோயாளிகள் உருவாகும் அபாயம் தோன்றியுள்ளது எனவும் அதிர்ச்சியான எச்சரிக்கைகள் வெளியாகின்றன.

பாலியல் உறவை திருமண வாழ்க்கைக்குள் மாத்திரம் வரையறுப்பதன் மூலம் எய்ட்ஸ் நோயிலிருந்து சமூகம் பாதுகாப்பு பெற முடியும்.

பாலியல் தொழில் மற்றும் முறையற்ற உடலுறவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எய்ட்ஸ் நோய் இல்லாத மனித சமுதாயத்தை உருவாக்கலாம்.

அவசர, அவசியமாக சிந்தித்து, தேசிய, சமூக மட்டத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விடயம் இது.

# பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரங்களால் இலங்கை தமிழர்களுக்கு பாதிப்பு

## காங்கிரஸின் சிரேஷ்ட தலைவர் பி.சிதம்பரம் தெரிவிப்பு



"கச்சதீவு விவகாரத்தை முன்னிறுத்தி பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதன் மூலம் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள்."

– இவ்வாறு காங்கிரஸின் சிரேஷ்ட தலைவர் பி.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் மூலம் இலங்கையில் உள்ள சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கிடையில் மோதல் நிலை ஏற்படலாமென பி.சிதம்பரம் எச்சரித்துள்ளார்.

இந்திய எல்லைகளை சீனா ஆக்கிரமிக்கும் நடவடிக்கையை மூடிமறைக்கும் நோக்கில் கச்சதீவு குறித்து பா.ஜ.க. பேசுகின்றது என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ள பா.ஜ.க, கச்சதீவை மீட்டு இந்தியாவுடன் இணைக்க வேண்டுமென தெரிவித்து வருகிறது.

இந்த விடயம் இலங்கையர்களை பாரியளவில் பாதிக்குமென்பதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது கட்சி உறுப்பினர்கள் நன்கு அறிந்திருக்கின்றனர் என பி.சிதம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையர்கள் எதிர்நோக்க நேரிடம் பிரச்சினையை அறிந்திருந்தும், தேர்தல் மற்றும் அரசியல் சுயநலத்துக்காக கச்சதீவு விவகாரம் தொடர்பில் பா.ஜ.க. பேசுவது கண்டிக்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பதவி வகிக்கும் நரேந்திர மோடி, கச்சதீவு தொடர்பில் கடந்த 10 ஆண்டுகளாக பேசாது, தற்போது திடீரென இந்த விடயத்தில் ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளார் என சிதம்பரம் கூறியுள்ளார்.

தேர்தல்களை இலக்காக கொண்டு பா.ஜ.க. மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கையில் பிரச்சினையை ஏற்படுத்துமென்பது வருத்தமளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாள் பிரதமரும் ஜனாதிபதியும் மரியாதை

அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு, இந்திய பிரதமரும் இந்திய ஜனாதிபதியும் அம்பேத்கரின் சிலைக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

அண்ணல் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்படுகிறது.

அதன்படி, பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்கள், அவரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அம்பேத்கரின் சிலைக்கு பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி திரவுபதி முர்மு ஆகியோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



# ஈரான் - இஸ்ரேல் மோதல் கவலைக்குரிய விடயம்

## மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு



இஸ்ரேலை நோக்கி ஈரான் சரமாரியாக ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை வீசி தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், 'இது மிகுந்த கவலைக்குரிய விஷயம்' என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீதான ஈரான் தாக்குதலுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, அர்ஜென்டினா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், இரு நாடுகளும் நிதானத்தைக் கடைபிடிக்குமாறு இந்தியாவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆங்கில ஊடகத்துக்கு அளித்த சிறப்பு பேட்டியில்,

"இது மிகுந்த கவலைக்குரிய விடயம். ஏனெனில் இந்த சம்பவம் ஒரு சூழ்நிலையின் தீவிரத்தை பிரதிபலிக்கிறது, இது நம் அனைவரையும் கவலையடையச் செய்கிறது. கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீதான தாக்குதல் குறித்து நாங்கள் சில காலமாக கவலைப்பட்டு வந்தோம். இப்போது இந்தச் சம்பவம் மீண்டும் வருத்தமடைய செய்கிறது.

பிராந்தியத்தின் நிலைமையை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இப்போது நாங்கள் மக்களை இஸ்ரேல் மற்றும் ஈரானுக்குப் பயணிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளோம். ஏற்கனவே அங்கு இருப்பவர்களிடம் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளோம். அதுதான் இப்போது செய்ய வேண்டிய முக்கியமான விஷயம். மேலும் என்ன நடக்கிறது என்பதை நாங்கள் கவனித்து வருகிறோம்." என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு டொனால்ட் ட்ரம்ப் கண்டனம்



“நான் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்திருந்தால் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதலை மேற்கொண்டிருக் காது.”

– இவ்வாறு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானின் தாக்குதல் தொடர்பில் பலர் கருத்துக்களை வெளியிட்டு வரும் பின்னணியிலேயே, அவர் இதனை தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதலில் படுகாய மடைந்த சிறுமியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், ஈரானின் அந்த தாக்குதல் நடவடிக் கையை வன்மையாக கண்டிக்கின்றோம் என சர்வதேச நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வரிசையில், தற்போது அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் தனது எக்ஸ் தளத்தில் இந்த தாக்குதல் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் “இஸ்ரேல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இப்படி நடக்க கண்டிப்பாக அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடாது. நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இது நடந்திருக்காது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்ரேல் - ஈரான் இடையில் மோதல்: மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரிப்பு!



இஸ்ரேலிக்கு எதிரான ஈரானின் தாக்குதலுக்கு, ஈரானிய மக்கள் வீதிக்கிறங்கி ஆதரவை வெளியிட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் மீது ஈரான் முன்னொருபோதும் இல்லாதளவில் பாரிய ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானதாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு, மிகழ்சியை வெளிப்படுத்தியுள்ள ஈரானிய மக்கள், “ஆண்டவனின் வெற்றி நெருங்கிவிட்டது”, “அடுத்த அடி மிகமோசமானதாக காணப்படும்”, “இஸ்ரேலிற்கு மரணம் அமெரிக்காவிற்கு மரணம்” போன்ற பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பியுள்ளனர்.

தெஹ்ரானின் பலஸ்தீன சதுக்கத்தில், பலஸ்தீன கொடிக ளுடன்கூடியஆயிரக்கணக்கானமக்கள்,இவ்வாறுஇஸ்ரேலுக்கு எதிராகவும் ஈரானுக்கு ஆதராவாகவும் குரல் கொடுத்து வருகின்றனர்.

சமீபத்தில் சிரியாவின் டமாஸ்கசில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், அங்குள்ள ஈரான் தூதரகம் கடும் சேத மடைந்ததுடன், இரண்டு தூதரக அதிகாரிகள் உட்பட ஏழு வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேல் மீது பெருமளவான ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுக ணைகள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானின் நூற்றுக்கும் அதிகமான ட்ரோன்கள் இஸ்ரேலை வந்து தாக்கின.

இந்தத் தாக்குதலால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித் துள்ளது. ஈரானின் நடவடிக்கைக்கு ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும் ஈரானின் தாக்குதலில் இஸ்ரேலின் தென்பகுதி யில் உள்ள இராணுவதளமொன்று சேதமடைந்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரான் செலுத்திய ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுக ணைகள் பலவற்றை இஸ்ரேலின் எல்லைக்குள் வைத்து செயல் இழக்கச்செய்துவிட்டதாக இஸ்ரேலின் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஈரான் இஸ்ரேலை நோக்கி செலுத்திய அனைத்து ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை செயல் இழக்கச்செய்வதில் அமெரிக்கா இஸ்ரேலிற்கு உதவிய– தாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் தெரிவித்துள் ளார்.

இதனிடையே, இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதலால், மறு உத்தரவு வரும்வரை, இந்தியர்கள் இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறு இந்திய வெளியுறவுத் துறை அறிவுறுத்தியுள்ளது.



# பொன்னாவெளி போராட்டத்தின் நியாயப்பாடுகள்

**- அ.ஈழம் சேகுவேரா -**
**(சிவில் சமூக மனித உரிமைகள் செயல்பாட்டாளர்)**

அரசியல்வாதிகளும், அந்த அரசியல்வாதிகள் சீழ் நிரம்பிய கொப்புளங்களை முலை என்று சொல்லிச் சப்பச் சொன்னால், அதனை நம்பி சப்பிக் குடிக்கத் தயாராகவிருக்கும் அரச நிர்வாகசேவை அதிகாரிகளும் அபிவிருத்தியின் வரைவிலக்கணத்தை முதலில் கற்றுத்தெளிய வேண்டும்.

தேர்தல் வாக்குகளுக்காகவும், அரசாங்க உத்தியோகம், அரசாங்க சம்பளப் பணம், உத்தியோகத்தில் பதவி உயர்வு, வயசுபோன காலத்தில் ஓய்வூதியத்துக்காகவும் மண்ணை, மணலை, மலையை, நீரை, கடலை, காட்டை, காற்றை, கனிம வளத்தை அள்ளி விற்றுத் தின்று வயிறு வளர்த்து ஏப்பம் விடுவதல்ல அபிவிருத்தி! ஒரு பூவுக்குச் சேதாரம் இல்லாமல் தேனீ எப்படி தேன் குடிக்கிறதோ, அதுபோலவே இந்த இயற்கையையும் சூழலையும் நுகர்ந்து, பராமரித்து அடுத்த தலைமுறைப் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பாக வைத்து விட்டுப் போவதற்குப் பெயர்தான் அபிவிருத்தி!

இரணைமடுகுளத்திலும், முத்துஐயன்கட்டு குளத்திலும், வவுனிக்குளத்திலும், பாவற்குளத்திலும், கட்டுக்கரைகுளத்திலும் தேவையான அளவு தண்ணீர் இருக்கிறது என்று சொல்லி, அங்கு தொழிற்சாலை அமைத்து எவ்வளவுக்கு எவ்வளவு தண்ணீரை உறிஞ்ச முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு தண்ணீரை உறிஞ்சி, வியாபாரம் செய்யுங்கள் என்று கொக்கோ கோலா கம்பனிக்கு அனுமதி கொடுத்துவிட முடியுமா என்ன? அதுபோல, பூநகரி பொன்னாவெளியில் தேவையான அளவு சுண்ணக்கல் இருக்கிறது என்றுசொல்லி, சுண்ணக்கல் அகழ்ந்து சீமெந்து உற்பத்தி தொழிற்சாலை அமைக்கலாம் என்ற முடிவுக்கு வருவது என்னவொரு அறிவிலித்தனம்!

மக்கள் வசிக்கவில்லை, நீரைப்பெறும் ஆதாரங்கள்கூட இல்லை. ஆனால், பாலைவன நாடுகளில் கண்ணுக்கு எட்டியத் தூரம்வரைக்கும் மணல் திட்டுகளும், மணல் அடுக்குகளும்தான் இருக்கின்றன என்பதற்காக, அந்த நாடுகள் மணலை அள்ளி விற்பதையே ஒரு தொழில் துறையாக மாற்றிக்கொண்டு, மணலை விற்றுத் தின்று தமது வயிற்றை வளர்ப்பதாக நீங்கள் எங்காவது செய்திகளில் அறிந்ததுண்டா?

ஏற்கனவே ஜீ.ஜீ.பொன்னம்பலம் என்ற ஓர் அரசியல்வாதி காங்கேசன்துறையில் அமைத்த சீமெந்து தொழிற்சாலையால் தமிழர் தேசத்தின் மண்வளமும், நீர்வளமும் பாழ்பட்டுப்போன நிலைமைகள் போதும்! அவரது அன்றையகால தூரநோக்கற்ற அரசியல் சிந்தனையால், காலப்போக்கில் கடல்நீர் உட்புகுந்து இன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் வடக்கில் ஒருபகுதி மக்கள் சுகாதாரமான, பாதுகாப்பான குடிதண்ணீர் இன்றி துன்பப்படுகின்றார்கள். ஒரு தேசிய இனத்தில், நாளாந்தம் தூய நீருக்காக போராடிக்கொண்டிருக்கும் ஒரு தொகுதி மக்களையும் நம்மிடையே காண்கிறோம். அந்த மக்களுக்கு தூயநீரைப் பெறுவதற்கான போராட்டமே, ஒரு வாழ்க்கை முறையாகவும் மாறிப்போயிருக்கிறது. இதுவொரு ஈடுசெய்துவிட முடியாத அவலநிலை! அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புகள் என்று கூறப்படும் கவர்ச்சிப்பொறியின் விளைவுகள், 60 ஆண்டுகள் காலவோட்டத்துக்குப் பின்னர் தமிழர் தேசத்துக்கு எவற்றைத் தந்துவிட்டுப் போயிருக்கின்றன என்று வரலாற்று அநுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள். தூயநீருக்கு அதுவும் குடிதண்ணீருக்குப் பிச்சை எடுக்கும் ஒரு மக்கள்

தொடர்ச்சி ▼



தொடர்ச்சி▲

# பொன்னாவெளி போராட்டத்தின் நியாயப்பாடுகள்

கூட்டத்தையே அவை உருவாக்கி விட்டிருக்கின்றன.

இனவழிப்பு போர் காரணமாக மக்கள் அங்கிருந்து இடம்பெயர்க்கப்பட்டு சென்றபின்னர், 25 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி ஓர் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம்! அங்கே, உள்ளே என்ன நடக்கிறது என்று தகவல் அறிய பொதுசனங்கள் எவருக்கும் வாய்ப்பிருக்கவில்லை, உரிமையும் இருக்கவில்லை. ஏன் என்று காரணம் கேட்ட போது, தேசிய பாதுகாப்புக்கான இரகசியம் என்றார்கள் படைத்துறையினர். ஆனால், உள்ளே என்ன நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது? வரையறுக்கப்பட்ட ஆழத்தையும் தாண்டி சுண்ணக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு கடத்திக் கப்பல்களில் கொண்டுசெல்லப்பட்டுள்ளன. தொழிற்சாலை இயந்திரங்களும் களவாடி இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கட்டுப்பாடுகளின்றி சுண்ணக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட அங்கிருக்கும் ஆழமான கிடங்குகளை, இன்று யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தலைமையகமும், வலிகாமம் வடக்கு பிரதேசசபையும் மனித மற்றும் மாமிச கழிவுகளாலும், வைத்தியசாலை கழிவுகளாலும் (பலாலி இராணுவ வைத்தியசாலை, தெல்லிப்பளை பொதுவைத்தியசாலை) நிரப்பிக்கொண்டிருக்கின்றன. சுண்ணக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நன்னீர் வளம் உவர்நீராக்கப்பட்டது. இப்போதோ அந்த நீர்வளம் நொதிக்கும் கழிவுகளால் நஞ்சூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு தவறைச் சரிசெய்ய, இன்னொரு தவறைச் செய்தால் அது சரியான தீர்வு என்று ஆகிவிடுமா? எதிர்கால தேசத்தை எப்படி கட்டமைக்கப்போகின்றோம் என்கிற புரட்சிகர தரிசனங்கள் இல்லாமல், சூழல்நேயம் – உயிர்நேயம் – மனிதநேயம் இல்லாமல், தேர்தலில் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைப் பெற்றுக் கொள்ளும் அற்பபுத்தியில் 1950இல் ஒரு அரசியல்வாதி செய்த தவறை சரிசெய்ய, இன்றைக்கு 60 ஆண்டுகளுக்குப் பின்னர் மனித கழிவுகள், மாமிசக்கழிவுகள், வைத்தியசாலைக் கழிவுகளைக் கொட்டிக் குழிகளை மூடலாம், இப்படியொரு தீர்வை முன்வைக்கும் அளவுக்குதான் இலங்கையின் அரசியல்வாதிகளினதும், அரசாங்க நிர்வாக சேவை அதிகாரிகளினதும் அறிவுசார் புலமை இருக்கிறது! கற்றுக்கொண்ட கல்வி அறிவிலும், தொழில்நுட்ப அறிவிலும் இவர்கள் எவ்வளவு தூரம் பின்நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், இயற்கையின் ஆற்றலுக்கு எதிராக மல்லுக்கட்டி போட்டிப்போட்டு அறிவாலும், பணத்தாலும், அதிகாரத்தாலும், மனிதர்களால் எப்போதுமே ஜெயித்துவிட முடியாது என்பதையுமே இது காட்டுகின்றது.

இயற்கை வளங்களை பொத்திப் பாதுகாத்து பராமரித்து வைத்திருக்கும் பாரம்பரிய கிராமங்களுக்குள் புகுந்து, பல்தேசிய நிறுவனங்கள் ஆசை வார்த்தைகளைப் பிரமாண்டமாக காட்டி, சாமான்ய மக்களின் புத்தியை மயக்கமுறச் செய்து, தீமை பயக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த சம்மதத்தைப் பெற்றுவிடும். ஆனால், “இந்த திட்டம் நல்லதல்ல. உங்களையும், உங்கள் கிராமத்தின் மண்வளத்தையும் நீர்வளத்தையும் அழித்துச் சுடுகாடு ஆக்கிவிடும். இந்த மண்ணின் பூர்வக் குடிகளான உங்களை இங்கிருந்து நிரந்தரமாக குடிபெயரச்செய்து விடும்.” இப்படி உண்மையைக்கூறி மக்களுக்கு வழிகாட்டுபவரே நல்ல அரசியல் தலைவராக இருக்க முடியும். ஆனால், பொன்னாவெளி கிராம மக்களின் விசயத்திலோ இந்த நிலைமை தலைகீழாக இருக்கிறது. கிராம மக்கள் சீமெந்து தொழிற்சாலைத் திட்டம் வேண்டாம் என்கிறார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திட்டத்தை நடத்தி முடித்தே தீருவேன் என்று

தொடர்ச்சி▼




தொடர்ச்சி▲

# பொன்னாவெளி போராட்டத்தின் நியாயப்பாடுகள்

கூறுகிறார். அப்படியென்றால், பெருந்தொகை தரகுப்பணம் கைமாறி விட்டதா? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

தாயின் முலையில் பால் குடிக்கச் சொன்னால், தாயின் இரத்தத்தையே உறிஞ்சி விடும் அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். இயற்கையை ஆரத்தழுவி அணைக்கச் சொன்னால், அணைப்பதுபோல நடித்து இயற்கையை சுரண்டிக் கொழுக்கும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். தரகுப் பணத்துக்காகவும், சுயநலத்துக்காகவும் இயற்கையை அசுரத்தனமாக வன்புணர்ந்துவிட்டு, பணத்தாலும் அதிகாரத்தாலும் அதனைச் சீர் செய்துவிட முடியுமென்று தப்புக்கணக்குப்போடும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். இப்படி அபத்தமானவர்களை தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவர்களாக தேர்ந்தெடுக்கவே கூடாது. அப்படித் தேர்ந்தெடுப்பார்களாயின், தமது கை விரலைக்கொண்டு தமது கண்களைத்தாமே குத்திக் குருடாக்கிக் கொள்ளும் செயலுக்கு அது ஒப்பானதாகும்! இவ்விடத்தில் தமிழ்க் கருத்துருவாக்கிகளையும், யாழ். பல்கலைக்கழகத்தின் துறைசார் அறிஞர்களையும் குற்றம் கடிகிறேன். நீங்கள் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு, நீங்கள் வாழும் தமிழ் சமூகத்துக்கு, அடையாள அழிப்பு சார்ந்த பிரச்சினைகள் வரும்போதெல்லாம் நீங்கள் உங்களுடைய துறைசார் நிபுணத்துவ அறிவை, எது சரி? எது பிழை? எது நன்மை? எது தீமை? என்று தெளிவுபடுத்தி, தமிழ் மக்களுக்கு சுயாதீனமாக வழங்கி வழிகாட்டுதல் வேண்டும். அப்படிச் செய்தால், இங்கு பல பிரச்சினைகள் பெரும் சர்ச்சையாக மேற்கிளம்பி பூதாகரமாவதற்கு முன்னரே நீர்த்துப் போகச் செய்யப்பட்டுவிடும். அப்படிச் செய்யாமல் கள்ள மௌனம் காத்தல் என்பது, நீங்கள் கற்ற கல்வி வெறுமனே அரசாங்க வேலைக்கும், அரசாங்க சம்பளப் பணத்துக்கும், அரசாங்க பதவி உயர்வுக்கும், பின்னாளில் அரசாங்க ஓய்வூதியத்துக்கும் மட்டும் தானா? என்ற அருவறுப்பான கேள்வியை உங்கள் முன் வைக்கின்றது.

முழு யாழ்குடா நாட்டையும், யாழ்குடாநாட்டை கிளிநொச்சியோடு இணைக்கும் கிளிநொச்சியின் பெருமளவு மேற்குகரைப் பகுதிகளையும், சுண்ணக்கல்பீட பூமிகளே தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. சுண்ணக்கற்களை அகழ்ந்தெடுத்தால் கடல்நீர் உட்புகுந்து நன்னீர் வளம் கெட்டுப் போகும். காலப்போக்கில் கரையோரக் கிராமங்கள் கடலுக்குள் மூழ்கிப்போய்விடும். இதனை எளிய உதாரணத்தில் சொல்வதென்றால் இப்படிச் சொல்லலாம், சுண்ணக்கற்களை அகழ்வதென்பது ஒரு வீட்டின் அத்திபாரத்தை உடைத்தெடுப்பதற்குச் சமம். அத்திபாரத்தை பிடுங்கி எடுத்தபின்னர் ஒரு வீடு தாக்குப்பிடிக்குமா? ஆகவே தமிழர் தாயக மண்ணில் எங்கேனும் சுண்ணக்கற்களை அகழ்ந்தெடுக்க அனுமதிக்க முடியாது. இதற்கு மோசமான சமகால முன்னுதாரணமாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை அமைக்கப்பட்ட சூழல், நம் கண்முன்னே உறுத்திக்கொண்டும், அச்சுறுத்திக்கொண்டும் நிற்கின்றது. அத்தியாவசியத் தேவை என்றால் மட்டும், ஒரு விடயத்தை நாம் இங்கு பரிசீலிக்கலாம். எப்படியென்றால், சீமெந்து தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்களை கப்பல்களில் கொண்டுவந்து அரைத்துப் பொதிசெய்யும் அல்லது சீமெந்தையே பாரிய கொள்கலன்களில் கொண்டுவந்து பிரித்துப் பொதியிடும் சூழலுக்கு பாதிப்பில்லாத தொழிற்சாலைகளை இங்கு அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம். ஆனால், குறித்த தொழிற்சாலையினுள்ளே மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது சென்று, அதிகாரமளிக்கப்பட்ட சிவில் சமூக குழுவொன்று சூழல் நிலைமைகளை கண்காணித்து அறிக்கையிடுவதற்கு தொழிற்சாலை நிர்வாகம் இணக்கம் தெரிவிக்க வேண்டும்.



# மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் விதைப்பை ஒழுங்குபடுத்த வழக்கு

(ந.லோகதயாளன்)

மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் நீரேந்தும் பிரதேசத்திலும் விவசாயம் செய்யும் நடைமுறையை தடுக்கும் வழக்கு நடவடிக்கைக்கு உதவுமாறு கோரி மன்னார் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மன்னார் பொது அமைப்புகளைச் சேர்ந்த 15 பேர் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து ஆவணங்களைச் சமர்ப்பித்து வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆவணங்களில் ஒப்பமிட்டனர்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் காணப்படும் குளங்களில் மேற்கொள்ளப்படும் சட்ட முறையற்ற விதைப்பு முறைமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் இவ்வாறான விதைப்பை மேற்கொள்வதனால் 17 கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதறகமைய இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது.



# சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வாகனங்களைக் காணவில்லை

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வெவ்வேறு வாகனங்கள் போதிய தகவல்கள் இன்றி காணாமல் போயுள்ளன எனத் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட தணிக்கையில் 679 வாகனங்கள் இடம்பெயர்ந்தமை தெரிய வந்துள்ளது.




240 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு கணக்காய்வுக்கு அறிவித்துள்ள போதிலும், இதனை உறுதிப்படுத்தும் வகையில் போதிய தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுகாதார அமைச்சின் கணக்காய்வு அவதானிப்புகள் ஏனைய 439 வாகனங்கள் தொடர்பில் நான்கு வருடங்களாக எந்தத் தகவலும் கண்டறியப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.



# புத்தாண்டு நாளில் வவுனியாவில் ஆதிவிநாயகர் தேர்த் திருவிழா

(கே.வசந்தன்)

புத்தாண்டு தினத்தில் வவுனியா, வைரவபுளியங்குளத்தில் எழுந்தருளியிருக்கும் ஆதிவிநாயகர் திருக்கோவில் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு புத்தாண்டு வழிபாட்டிலும் தேர்திருவிழா வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

வவுனியாவில் உள்ள முக்கிய திருத்தலங்களில் ஒன்றாகிய வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் திருக்கோவிலின் மகோற்சவப் பெருவிழா கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

மகோற்சவப் பெருவிழாவின் 9 ஆம் நாளான நேற்றுத் தேர்த் திருவிழா மகோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ திவாகரக்குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

ஆதிவிநாயகர் பெருமானுக்கு மேளதாள வாத்தியங்கள் முழங்க விசேட அபிடேகங்கள் இடம்பெற்று உள்வீதி வலம் வந்த ஆதிவிநாயகப் பெருமான், வெளி வீதியில் பிரவேசித்து அலங்கரிக்கப்பட்ட தேரில் அமர்ந்து அடியாவர்களுக்கு அருள் பாலித்தமையுடன், பக்த அடியார்கள் சிதறு தேங்காய் அடித்தும், அங்கப் பிரதிஸ்டை செய்தும், கற்பூரச் சட்டி ஏந்தியும், ஆதிவிநாயகப் பெருமானை அரோகரோ கோசத்துடன் வழிபட ஆதிவிநாயகர் பெருமான் தேரில் வலம் வந்து அடியார்களுக்கு புத்தாண்டு தினத்தில் அருள்பாலித்தார்.

குரோதி புத்தாண்டு தினத்தில் இத் தேர் திருவிழா இடம்பெற்றமையால் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த அடியவர்கள் விநாயகப் பெருமானை வழிபட்டதுடன், தமக்குள் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொண்டனர்.











# அகரகந்தைத் தோட்டத்தில் காவல் தெய்வ உற்சவங்கள்

(ஆ.ரமேஸ்)

லிந்துலை நாகசேணை பிரதேசம் அகரகந்தைத் தோட்டத்தில் 200 வருடகால வரலாற்றை கொண்டு திகழும் மாடசாமி ஆலயம், காளியம்மன் ஆலயம் மற்றும் நொண்டி மதுரை வீரன் ஆகிய காவல் தெய்வங்களுக்கு வருடாந்த உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

மலையக பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் காவல் தெய்வ வழிபாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாகத் திகழ்கின்றார்.

மலையக தோட்டப் பகுதிகளில் காணப்படும் தேயிலை மலைகளில் தொழிலாற்றும் தோட்ட தொழிலாளர்கள் தங்களின் நம்பிக்கைக்கு உரிய காவல் தெய்வங்களுக்கு ஆலயம் அமைத்தும், ஆலயங்கள் இன்றியும் ஆண்டாண்டு காலமாக வழிபட்டு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அந்த வகையில் லிந்துலை நாகசேணை பிரதேசம் அகரகந்தைத் தோட்டத்தில் 200 வருடகால வரலாற்றை கொண்டு திகழும் மாடசாமி ஆலயம், காளியம்மன் ஆலயம் மற்றும் நொண்டி மதுரை வீரன் ஆகிய காவல் தெய்வங்களுக்கு அத்தோட்ட மக்கள் ஆலயம் அமைத்து அத்தெய்வங்களுக்கு வருடா வருடம் திருவிழாக்கள் நடத்துவது அன்று முதல் இன்று வரை வழக்கத்தில் காணப்படுகிறது.

இதனடிப்படையில் அகரகந்தை தோட்டத்தில் பிரமாண்டமாக இரண்டு சிலைகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற மாடசாமி ஆலயத்தின் வருடாந்த வேள்வி உற்சவ விழா கடந்த வாரம் மூன்று திங்களாக இடம்பெற்றது.

இதன்போது மாடசுவாமிக்கு தீர்த்த உற்சவம், வேள்வி பூசை மற்றும் அன்னதான பூசை என்பன இடம் பெற்றன.

இதை தொடர்ந்து சனிக்கிழமை அன்று இத் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நொண்டி மதுரை வீரன் சுவாமி மற்றும் காளியம்மன் வருடாந்த விழா எடுக்கப்பட்டது.

இதன் போது வெள்ளையம்மா சகிதம் நொண்டி மதுரை வீரன் சுவாமிகள் மற்றும் காளியம்மன் ஆகியவற்றின் சப்பாரங்கள் ஊர்வலம் இடம்பெற்று சிறப்பு பூசைகள் வெகு விமர்சையாக நடைபெற்றன.













# கொழும்பு திரும்புவோருக்காக நேற்று முதல் விசேட ரயில்கள்

வெளி மாகாணங்களில் இருந்து கொழும்புக்கு வரும் மக்களுக்கான மேலதிக ரயில் சேவைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் நந்தன இந்தி பொலகே தெரிவித்துள்ளார்.

அதன்படி 14,15 ஆம் திகதிகளில் பதுளை, காலி மற்றும் பெலியத்தை ரயில் நிலையங்களிலிருந்து கொழும்பு கோட்டை வரை 8 மேலதிக ரயில் சேவையில் இயக்கப்படவுள்ளன.

இது தவிர நாளை 16ஆம் திகதி முதல் அலுவலக ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என ரயில்வேத் திணைக்களம் மேலும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இந்திய முட்டை விலை குறைப்பு உள்ளூர் முட்டை விலை உயர்வு!

இறக்குமதி செய்யப்படும் இந்திய முட்டைகளின் விலை குறைக்கப்பட்டுள்ள அதேவேளை, உள்ளூர் முட்டைகளின் விலையும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக 40, 45 ரூபாவாகக் குறைக்கப்பட்ட நாட்டு முட்டையின் விலை புத்தாண்டின் போது 50 முதல் 60 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களுக்குத் தேவையான முட்டைகளை தட்டுப்பாடின்றி வழங்கவும், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலும் இந்திய முட்டை ஒன்றின் விலையை 42 ரூபாவில் இருந்து 36 ரூபாவாக குறைக்க லங்கா சதொச நடவடிக்கை எடுத்துள்ளது.




# பண்டிகைக் காலம் வினைத்திறனுடன் சுகாதார சேவைகள் பொதுமக்களுக்கு

தற்போதைய பண்டிகைக் காலத்தில் வினைத்திறன் மற்றும் தொடர்ச்சியான சுகாதார சேவைகளை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவினால் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார செயலாளர் பாலித மஹீபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொதுவாக பண்டிகைக் காலங்களில் விபத்துகள், உணவு விஷம் மற்றும் தொற்றாத நோய்கள் அதிகரித்து வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விபத்துக்கள், உணவு விஷமான சம்பவங்கள் மற்றும் தொற்றாத நோய்கள் காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளர்களுக்கு துரித சேவைகளை வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசர காலங்களில் சேவைகளை வழங்க அவசர ஊர்தி சேவைகள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்கின்றன என பாலித மஹீபால மேலும் தெரிவித்துள்ளார்.






# புத்தளத்தில் குடும்பஸ்தர் மின்னல் தாக்கி உயிரிழப்பு

புத்தளம், மஹகும்புக்கடவல பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

மஹகும்புக்கடவல – ஹோராம்பகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய லேனந்துவாகே விமல் சோமஸ்ரீ எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அந்த நபர் தனது விவசாய நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்த போது மின்னல் தாக்குதலுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக மஹகும்புக்கடவல கிராமிய வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் ஏற்கனவேவர் உயிரிழந்து விட்டார்கள் எனவைத்தியர்கள் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதிக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி, இந்த மரணம் தொடர்பான விசாரணையை நடத்தினார்.

சடலம் புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மின்னல் தாக்கியதால் ஏற்பட்ட திடீர் மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு சடலம் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பலாங்கொடையில் குத்திக் கொலை



இரு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதலில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடை – பெட்டிகல பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பெட்டிகலவத்தையைச் சேர்ந்த 32 வயதுடைய ஓட்டோச் சாரதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுபான விருந்து ஒன்றின் போது இரு பிரிவினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தீவிரமடைந்து இக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலை தொடர்பாக 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடற்படையினர் மடக்கிய ரூ.380 கோடி பெறுமதியான போதைப்பொருள் காலி துறைமுகத்தில் கரை சேர்ப்பு

## 10 சந்தேக நபர்களுடன் அவர்களின் இரு இழுவைப் படகுகளும் சிக்கின

இலங்கையின் தெற்கு முனையில் தொந்துரவிலிருந்து சுமார் 246 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளூர் பல நாள் மீன்பிடி இழுவை படகிலிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 380 கோடி ரூபா பெறுமதியான 179 கிலோ 906 கிராம் கிரிஸ்டல் மெத்தம் பெட்டமைன் (ICE) மற்றும் 83 கிலோ 582 கிராம் ஹெரோயின் உட்பட போதைப் பொருட்களை இலங்கை கடற்படையினர் காலித் துறைமுகத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்த நடவடிக்கையின் போது ஆறு பேரை ஏற்றிச் சென்ற உள்ளூர் பல நாள் மீன்பிடி இழுவை படகு ஆழ் கடலில் இலங்கை கடலோர காவல் படை கப்பல் (SLCG) சமுத்திரரக்ஷா வினால் கடந்த வெள்ளியன்று இடைமறிக்கப்பட்டது. அதிலிருந்தே போதைப்பொருள்கள் கைப்பற்றப் பட்டன.

மேலும், நான்கு பேருடன் மற்றொரு உள்ளூர் மீன்பிடி இழுவைப் படகு படையினரால் கைப்பற்றப்பட்டது. இது நடுக்கடலில் போதைப்பொருள் பரிமாற்றத்திற்காகக் காத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட பொருள்களை இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா காலி துறைமுகத்தில் பார்வையிட்டார்.



இலங்கை கடற்படை மற்றும் கடலோரக் காவல்படையினர், சட்டவிரோதமான நடவடிக்கைகளை, குறிப்பாக கடல் வழிகள் ஊடாக போதைப்பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்காக, தீவின் கரையோரங்களில் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் விழிப்புடன் உள்ளனர் என்று கடற்படை தெரிவித்தது.

பல நாள் மீன்பிடி இழுவை படகில் 17 சாக்கு மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிரிஸ்டல் மெத்தம் பெட்டமைன் மற்றும் ஹெராயின் உள்ளிட்ட போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. காலி துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட முழுமையான சோதனையின் பின்னர், போதைப் பொருள் அடங்கிய மேலும் 17 சாக்குகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இந்தச் சரக்குகள் மற்றும் மீன்பிடி இழுவை படகுகள் ஆகியவற்றுடன் சந்தேக நபர்கள் சட்ட நடவடிக்கைக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்கள் வெலிகம, இமதுவ மற்றும் காலி போன்ற பிரதேசங்களில் வசிக்கும் 23 வயது முதல் 54 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.04.2024




இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ் நிலைகள் காணப்படும். பணிகள் மும்மரமாக இருக்கும். என்றாலும் உங்கள் திறமை மூலம் நீங்கள் விரைந்து பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறை நேர்மையாக இருக்கும். இந்த நேர்மை உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ் டம் நிறைந்து காணப்படும். இன்று ஆக்க பூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் நம்பிக்கை தரும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று திடமான ஆரோக் கியம் காணப்படும்.




இன்றைய தினத்தை அமைதியான தினமாக ஆக்க நீங்கள் நம்பிக்கை, தைரி யம் மற்றும் உறுதியுடன் இருக்க வேண்டும். பதற்றத்தை விடுத்து மகிழ்ச்சியாக இருங்கள்.

பணிகள் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். எளி தாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசி உங்கள் நாளை மகிழ்ச்சியானதாக ஆக்குவீர்கள். இதனால் வேறுபாடுகள் நீங்கி திருப்தி நிலவும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத் தைக் கையாளும் போது விழிப்புடன் இருக்க வேண் டும்.

இன்று சளி மற்றும் இருமலால் பாதிக்கப்படுவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.




இன்று நீங்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். சிறப்பான பலன்கள் பெற உங்கள் செயல்களை திட்டமிட வேண்டும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். திறமையுடன் பணி யாற்ற திட்டமிடுதல் அவசியம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே விவாதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு இருவரும் பேசுவதை தவிர்க்கவும். இன்று உங்கள் காதல் மனதை வெளிப் படுத்துவதற்கு உகந்த நாள் அல்ல.

உங்களிடம் பணம் சிறிதளவு காணப்படும். ஆனால் செலவுகள் அதிகமாக இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சி யாக வைத்திருக்க வேண்டும். இன்று சில சௌகரியங்கள் குறைந்து காணப் படும். இன்று மனதுக்குத் திருப்தி கிடைப் பது கடினம்.

உங்கள் திறமை உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணியைக் குறித்து உங்கள் மேலதிகாரிகள் பெருமைப்படுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். சுமுகமான பேச்சுவார்த்தைகல் ஆறுதலை தரும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும்.

முறையான உணவுப் பழக்கத்தின் மூலம் ஆரோக் கியமாக இருக்க இயலும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ளலாம்.




இன்று வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்தாக்கிக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கு கிடைத்த அங்கீ காரம் உங்களுக்கு திருப்தி அளிக்கும். புதிதாக கொடுக்கப்பட்ட வேலை உங்க ளுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

உங்கள் காதலை உங்கள் துனையிடத்தில் வெளிப் படுத்துவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்களை திடமாக வைத்திருக்க உதவும்.




இன்று உங்களுக்கென்று இலட் சியத்தை அமைத்துக் கொண்டு அதனை அடைய முயற்சி செய்வீர்கள். உங் களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உயர்ந்த இலட்சியத்தை அடைவீர்கள்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களு-க்கு திருப்தி காணப்படாது. அதிகப் பணிகள் காணப்படும். அவை இயந்திரத்தனமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் தேவைகளுக்கு செலவு செய்ய போதிய அளவு பணம் காணப்படும். எதிர்கால முதலீடு திட்டங்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.

நீங்கள் தொடை மற்றும் கால் வலியால் அவதிப்பட நேரலாம். முறையாக உடற்பயிற்சி செய்வதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்படுத்த முயலுங்கள். அது உங்களுக்கு ஆறுதலையும் திருப்தி யையும் மகிழ்ச்சியையும் தரும்.

பணிகளை திறமையாக ஆற்று வதில் ஸ்திரத்தன்மை இருக்காது. சக பணியாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். மேலதி காரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையுடன் தேவையில்லாத வாக்கு வாதங்கள் ஏற்படலாம். உங்களை அமைதியாக வைத் திருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவில் பணத்தை முதலீடு செய்வதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.




இந்த நாளில் எழும் எந்தவிதமான சஞ்சலத்திற்கும் இடம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருப்பது நல்லது.

பணியிடச் சூழல் அனுகூலமாக இருக்கும். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் பிரியமானவரிடம் உங்கள் அன்பை வெளிப் படுத்த இயலாது. உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத் தும்.

நிதிநிலையில் பற்றாக்குறை காணப்படும். பணம் கரைவதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் திடமாக இருக்கும். உங்க ளிடம் காணப்படும் உறுதி மற்றும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.04.2024

## தனுசு

உங்கள் உறுதியின் மூலம் சிறந்த பலன்களைக் காண்பீர்கள். வெற்றியின் மீதான உங்கள் நம்பிக்கை காரணமாக வெற்றி உங்கள் கதவைத் தட்டும்.

நீங்கள் பணிகளை எளிதாக ஆற்றி நற்பெயரைப் பெறுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள். அவர்கள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இன்று உங்கள் துணையிடம் நட்புறவு கொண்டிருப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கிய பிரச்சினைகள் ஏதும் காணப்படாது. இன்று அமைதியாக ஓய்வாக காணப்படுவீர்கள்.

## கும்பம்

இன்று மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும். நீங்கள் துடிப்புடன் இயங்க தேவையற்ற கவலைகளை விட்டொழிக்க வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தவறுகள் நேராமல் உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பதற்றத்துக்கு ஆளாவீர்கள். இது உங்கள் நடத்தையில் வெளிப்படும். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தொடை மற்றும் கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானப் பயிற்சி மேற்கொள்வது நல்லது.

## மகரம்

இன்று சிறப்பான நாளாக இருக்காது. என்றாலும் இறைவழிபாட்டின் மூலம் இன்றைய நாளை நீங்கள் சமாளிக்கலாம். உங்கள் குடும்பத்துடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் பணிகளில் தவறுகள் செய்வீர்கள். அதனை உங்கள் மேலதிகாரிகள் கவனிப்பார்கள். அந்த வேலையை திரும்ப செய்யக் கூறுவார்கள்.

உங்களின் மாறுபடும் மனநிலை உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். ஆரோக்கியமான உறவிற்கு நீங்கள் இன்று சகஜமாக இருக்க வேண்டியது அவசியம்.

கடன்கள் மூலம் பணம் பெறுவீர்கள். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

## மீனம்

நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு சென்று வரலாம். உங்கள் செயல்களில் உணர்ச்சிவசப்படாமல் யதார்த்தமாக இருங்கள். அமைதியாக இருங்கள்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும்.

உங்களின் ஈகோ உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். இம்மாதிரி உணர்வுகளை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம். செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. உங்கள் நிதி நிலைமையை சிறப்பானதாக ஆக்க பயனுள்ள யுக்திகளைக் கையாள வேண்டும்.



